செ.வெ.எண்: 14 நாள்: 08.07.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி கூட்டுகுடிநீர் திட்டப்பணிகள் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி கூட்டுகுடிநீர் திட்டப்பணிகளில் நீர் உந்தும் நிலையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.07.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது நீர் உந்தும் நிலையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2011-12ம் ஆண்டு சட்டப்பேரவையில் மானிய கோரிக்கையின் போது காவிரி கூட்டு குடிநீருக்கான இரண்டு திட்ட பணிகளுக்கு ரூ.617.20 கோடி மதிப்பில் நிதிஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில் முதலாவது திட்டப்பணி புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த குன்னாண்டார் கோவில், கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி, புதுக்கோட்டை, திருவரங்குளம், அறந்தாங்கி, விராலிமலை, அன்னவாசல் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த வல்லம் பேரூராட்சி மக்கள் பயனடையும் வகையில் கூட்டுகுடிநீர் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன்படி புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் (பகுதி), கந்தர்வக்கோட்டை (பகுதி), கறம்பக்குடி-புதுக்கோட்டை (பகுதி), திருவரங்குளம், அறந்தாங்கி (பகுதி), விராலிமலை (பகுதி), அன்னவாசல் (பகுதி) ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் வல்லம் பேரூராட்சிகள் உட்பட 1751 குடியிருப்புகளுக்கான கூட்டு குடிநீர்த்திட்டம் 28.01.2013 அன்று ரூ.315.70 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு 29.01.2013 அன்று ரூ.294.77 கோடி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு 10/20 லிட்டர் நீராதாரங்கள் மூலமும், மீதமுள்ள 30/20 லிட்டர் குடிநீர் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் உச்சக்கட்ட குடிநீர் அளவாக நாளொன்றுக்கு 23.23 மில்லியன் லிட்டர் வழங்கப்படும். மேலும், இக்கூட்டுகுடிநீர் திட்டத்திற்கான நீராதாரம் தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியத்தை சேர்ந்த திருச்சென்னம்பூண்டி என்ற இடத்திலுள்ள கொள்ளிடம் ஆற்றில் தேர்வு செய்யப்பட்டு அங்கு 6 மீ விட்டமும், 18.50 மீ ஆழமும் கொண்ட நீர் சேகரிக்கும் கிணறு ஒன்று அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

இதில் தஞ்சாவூர் மாவட்டம் மணையேறிப்பட்டி நீர் உந்து நிலையம், புதுக்கோட்டை முள்ளூர் நீர் உந்து நிலையம் ஆகிய இடங்களில் நீர் உந்தும் மையங்கள் பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் தற்பொழுது 31.5 கி.மீ எம்.எஸ். குழாய்களும், 2025 கி.மீ நீளம் பி.வி.சி குழாய்களும், 194 கி.மீ நீளம் டி.ஐ குழாய்களும் பதிக்கப்பட்டு 249 நீர் சேகரிக்கும் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு அதற்குண்டான 247 மின்விசை அறைகள் மற்றும் 114 மேல்நிலைத்தொட்டிகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு தற்பொழுது சோதனை ஓட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

..2..

இதுவரை 112 நீர் சேகரிப்பு தொட்டிகளுக்கு சோதனை அடிப்படையில் நீர் உந்தப்பட்டு, 466 குடியிருப்புகளுக்கு சோதனை முறையில் நீர் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மீதமுள்ள 1285 குடியிருப்புகளுக்கு விரைவில் சோதனை முறையில் நீர் கொண்டு செல்லப்பட்டு பணிகள் முடிவடையவுள்ளன. இதன் மூலம் காவிரி கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் மிக விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளதுடன், இதன் மூலம் சுமார் 7.63 இலட்சம் மக்கள் பயன்பெறவுள்ளனர் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப. அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தின் முள்ளூர் நீர் உந்து நிலையத்திலிருந்து புதியதாக கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்திற்கு காவிரி நீர் வழங்குவது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப்பொறியாளர் திரு.என்.பேச்சியப்பன், உதவி நிர்வாகப்பொறியாளர்கள் திரு.அரு.சுப்ரமணியன், திரு.இர.மாதவன், திரு.பன்னீர்செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**